**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 424/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ரங்கம்மாள் | **Caste** | : | |
| **Husband Name** | : | நல்லுச்சாமி | **Calling** | : | கூலி |
| **Village** | : | நொச்சிஓடைப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 50 |
| | | | **Dated** | : | 19.09.2025 |

**19.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திருமதி.ரங்கம்மாள் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் நொச்சிஓடைப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன் நான் எனது தோட்டத்தில் மாலை 6.00 மணிக்கு நான் மாட்டை கட்டி கொண்டிருந்தேன். மாட்டை யாரோ அவிழ்த்து சென்றார்கள். நான் சத்தம் போட்டவுடன் மாட்டை விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். அதன்பின் நான் மாட்டை பிடித்து கொண்டு வரும்போது 3 பேர் நான் அணிந்திருந்த நகையை கேட்டார்கள். நான் கொடுக்கமுடியாது என்று அவர்களை தடுத்தேன். அதில் ஒரு நபர் எனது செயினை பறித்து விட்டார். மற்றொரு

நபர் என்னை நோக்கி அருவாளை வீசினார். அதை நான் கையால் தடுத்தபோது எனது வலது கை சுண்டுவிரலில் காயம் பட்டது. பின்னர் எனது அலறல் சத்தம் கேட்டு எனது கணவரும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்களும் வந்துவிட்டார்கள். அதன்பின்னர் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்ப்படுகிறது. புகாரை என்னிடம் படித்து காட்டினார்கள் நான் கைரேகை வைத்தேன். போலிசார் வந்து விசாரித்தார்கள். பின்னர் நகையை நீதிமன்றத்திலிருந்து மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். ஆஜர் எதிரிகள் தான் என்னிடம் செயினை பறித்த நபர்கள் ஆவார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்ககட்டி நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். **புகைப்படத்தில் உள்ள தங்ககட்டி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் வாயப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை–இல்லை**</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.19 15:04:56 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 424/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | நல்லுச்சாமி | **Caste** | : | |
| **Father's Name** | : | முருகாண்டி | **Calling** | : | கூலி |
| **Village** | : | நொச்சிஓடைப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 61 |
| | | | **Dated** | : | 19.09.2025 |

**19.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு.நல்லுச்சாமி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் நொச்சிஓடைப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த ஆண்டு 09.06.2024ம் தேதி மாலை 6.00 மணிக்கு எனது இடத்திற்கு அருகில் உள்ள பாலிடெக்னிக் அருகே ஆடு மேய்த்து கொண்டிருந்தேன். எனது தோட்டத்திலிருந்து எனது மனைவி அலறி கொண்டிருந்தார் பக்கத்தில் இருந்தவர்கள் எனது பெயரை சொல்லி கூப்பிட்டார்கள். நான் எனது தோட்டத்திற்கு வந்து எனது மனைவியை பார்த்தபோது எனது மனைவியின் கழுத்தில் இருந்த செயினை பறித்து சென்றார்கள். வலது கை சுண்டுவிரலில் வெட்டு காயம் பட்டிருந்தது. இது

சம்மந்தமாக நான் தாலுகா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எனது மனைவியை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் வாயப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை–இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.19 15:05:06 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 424/2024**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ரங்கநாதன்** | **Caste** | : | |
| **Father’s Name** | : | **சீரங்கன்** | **Calling** | : | **டீகடை** |
| **Village** | : | **நொச்சிஓடைப்பட்டி** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **49** |
| | | | **Dated** | : | **19.09.2025** |

**19.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 திரு. ரங்கநாதன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் நொச்சிஓடைப்பட்டியில் குடியிருந்து டீகடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். கடந்த ஆண்டு ஜீன் மாதம் ஒரு நாள் கடையில் வேலை பார்த்து கொண்டிருந்தபோது, செயின் பறித்த சம்பவம் நடந்த இடத்தில் போலிசார் விசாரித்து, வரைபடம் வரைந்தார்கள். போலிசார் என்னை அழைததார்கள். நான் சம்பவ இடம் சென்று பார்த்து கையொப்பம்

போட்டு கொடுத்தேன். பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை-இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.19 15:05:15 +0530

Judicial Magistrate No.I

Dindigul.